இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 151 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 26 – சனிக்கிழமை 10 ஜனவரி 2026 – சென்னை 32 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 151 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 26 - Saturday 10 January 2026 - Chennai 32 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக உயர்த்திக் காட்டுவதுதான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் 2026 தேர்தலுக்கான வாக்குறுதி!

# மக்களின் கனவுகளை நிச்சயம் திட்டங்களாக நிறைவேற்றுவோம்!

## “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தைத் தொடங்கி வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**திருவள்ளூர், ஜன. 10-**

**திருவள்ளூர் மாவட்டம், பாடிய நல்லூரில் “உங்க கனவ சொல்லுங்க” என்கிற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகையில், “தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக உயர்த்திக் காட்டுவதுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் 2026 தேர்தலுக்கான வாக்குறுதி” எனவும், “தமிழ்நாட்டு மக்களின் கனவுகளை, கோரிக்கைகளை திட்டங்களாக நிச்சயம் நிறைவேற்றுவோம்” என்றும் உறுதிபடக் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பாடிய நல்லூரில், தமிழ்நாடு அரசின் “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டின் வரலாற்றில், இன்றைக்கு மிக மிக முக்கியமான நாள்! வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்!

உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களுடைய அரசு, மக்களான உங்களிடம், உங்களுடைய கனவுகளைக் கேட்டு, அதையெல்லாம் நிறைவேற்ற தொடங்கப்பட்ட நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது! நான் எதற்காக இங்கு வந்திருக்கிறேன் என்றால், “உங்க கனவ சொல்லுங்க” அதை நிறைவேற்றி தருகிறோம் என்று கேட்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன்.

### என்னுடைய கனவுகளை இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, திருச்சியில் நடந்த மாபெரும் மாநாட்டில், நான் உரையாற்றுகின்றபோது ஏழு வாக்குறுதிகளைச் சொன்னேன். அந்த ஏழு வாக்குறுதிகள் என்னவென்றால்,

- முதல் வாக்குறுதி - வளரும் வாய்ப்புகள், வளமான தமிழ்நாடு!
- இரண்டாவது வாக்குறுதி - மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி!
- மூன்றாவது வாக்குறுதி - குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்!
- நான்காவது வாக்குறுதி - அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்ந்த மருத்துவம்!
- ஐந்தாவது வாக்குறுதி - எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்!
- ஆறாவது வாக்குறுதி - உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்!
- ஏழாவது வாக்குறுதி - அனைவருக்கும் அனைத்துமான தமிழ்நாடு! என்று ஏழு வாக்குறுதிகளை நான் வழங்கியிருந்தேன். இது என்னுடைய கனவுகள் என்று சொல்லி, அந்த வாக்குறுதியை வழங்கினேன். இதையெல்லாம் இப்போது நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பாடியநல்லூரில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, தங்கள் கனவினை தெரிவித்தவர்களுக்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டையினை வழங்கினார். இவ்விழாவில், அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சசிகாந்த் செந்தில், டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், எஸ். சந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன், வி.ஜி. ராஜேந்திரன், ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், கே.பி.பி. சங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழ்நாடுதான் பெஸ்ட்!

சொன்னால் - சொன்னதைச் செய்பவன்தான், உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கக்கூடிய இந்த ஸ்டாலின்!

### முதலீடு செய்ய உகந்த மாநிலம் தமிழ்நாடு!

பொருளாதாரத்தை உயர்த்துவோம் என்று சொன்னேன். இன்றைக்கு, நம்முடைய தமிழ்நாடுதான் 11.19 விழுக்காடு வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே BEST மாநிலமாக இருக்கிறது! இந்தியாவிற்குள் Invest செய்ய வேண்டும் என்று எந்த நிறுவனமாவது நினைத்தால், அவர்களின் First Choice-ஆக தமிழ்நாடுதான் இருக்கிறது!

அதேபோல, விவசாயத்திற்கும், பாசனப் பரப்பு அதிகமாயிருக்கிறது; விளைச்சல் அதிகமாகியிருக்கிறது; இலாபம் தரும் தொழிலாக மாறியிருக்கிறது!

**இந்தியாவிலேயே கல்விக்காக தமிழ்நாடு செய்யும் அளவிற்கு, எந்த மாநிலமும் செய்வதில்லை என்று பெருமையுடன் சொல்லும் அளவிற்கு மாதிரிப் பள்ளிகள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் என்று செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்! நம்முடைய மாணவர்களும், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, போட்டித் தேர்வுகள் என்று எல்லாவற்றிலும் அடித்து தூள் கிளப்புகிறார்கள்!**

### ஐ.நா.மன்றமே பாராட்டும் கழக அரசின் மருத்துவத் திட்டம்!

அடுத்து, மருத்துவம்! தமிழ்நாட்டின் மருத்துவத் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாடுதான் இப்போது Medical Tourism-த்தின் மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது! வெளிநாடுகளில் இருந்தும், மருத்துவச் சிகிச்சைகளுக்காக இங்குதான் வருகிறார்கள். இந்த தரமான மருத்துவத்தை உங்கள் வீடுகளுக்கே கொண்டுவந்து சேர்க்கத்தான் மக்களைத் தேடி மருத்துவம் என்று ஐ.நா. மன்றமே பாராட்டும் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48, இதயம் காப்போம், பாதம் காப்போம், நலம் காக்கும் ஸ்டாலின் என்று ஏராளமான திட்டங்கள் - மக்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன!

அடுத்து, மற்ற மாநிலங்களைப் பார்த்தீர்கள் என்றால், பெரும்பாலும், அந்த மாநிலத்தின் தலைநகரமும் முதல் நிலை நகரங்களும்தான் வளர்ந்திருக்கும்! ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் தான் இப்போது இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களும் வளர்ந்திருக்கிறது! சாலைகள் - பாலங்கள் - போக்குவரத்து இணைப்பு - குடிநீர் வசதி என்று உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றிருக்கிறது! நகரங்கள் - பேரூர்கள் மட்டுமல்ல, கிராமங்களும் வளர்ந்திருக்கின்றன!

இது எல்லாவற்றிற்கும் மேல் சமூகநீதி அரசை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்! ஆதிதிராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், விளிம்பு நிலை மக்கள் என்று, எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து நாம் செய்து கொண்டிருக்கிறோம்!

அதுவும், இவை எல்லாவற்றையும் எந்தச் சூழ்நிலைகளில் நாம் சாதித்துக் காட்டியிருக்கிறோம்? நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது, கொரோனா என்ற கொடுமையான பாதிப்பு உச்சத்தில் இருந்தது! நல்லது எதற்குமே ஒத்துழைக்காத, தமிழ்நாட்டிற்கும், தமிழர்களுக்கும் எதிராக மட்டுமே சிந்தித்துச் செயல்படும் பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஒன்றிய அரசில் இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்நாட்டு உரிமைகளை எல்லாம், ஆமாம் சாமி போட்டு அடகு வைத்த அ.தி.மு.க. இப்போது எதிர்க்கட்சியான பிறகு, உண்மைக்குப் புறம்பான போலிச் செய்திகளை எல்லாம் உருவாக்கி, அவதூறு பரப்பிகொண்டு இருக்கிறார்கள்.

### கழக அரசின் சட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதையே முதல் வேலையாகக் கொண்டவர்!

தமிழ்நாட்டிற்கும், ஒன்றிய அரசிற்கும் பாலமாக இருக்க வேண்டிய ஆளுநர் என்ற பொறுப்பில் இருப்பவர், என்ன செய்கிறார் என்பது உங்களுக்கே தெரியும்! உங்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து, சட்டமன்றத்தில் நிறை வேற்றும் சட்டங்களுக்கு முட்டுக் கட்டை போடுவதே தன்னுடைய முதல் வேலை என்று ஆளுநர் செயல்படுகிறார்.

இத்தனையும் மீறி, மக்களான நீங்கள் எங்கள் கூடவே இருப்பதால்தான், 2021-இல் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### பெண்களுக்குப் பாதுகாப்பு - சிறந்த சூழல் நகரங்களின் பட்டியலில்

# சென்னை மாநகரம் முதலிடம்!

## அவதார் குழும ஆய்வில் தகவல்!

*சென்னை, ஜன.10-*

*பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறந்த சூழல் உள்ள நகரங்களின் பட்டியலில், பெங்களூரு மற்றும் சென்னை நகரங்கள் முதல் 2 இடங்களைப் பிடித்துள்ளன.*

*தொழில் நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற அம்சங்களில் பெங்களூரு வலுவாக இருந்தாலும், பாதுகாப்பு, பொது சேவை, போக்குவரத்து, ஆரோக்கியம் மற்றும் கல்வி போன்ற சமூக சூழல்களை கணக்கிடும் போது, சென்னை முதலிடத்திலும், பெங்களூரு 3ம் இடத்தையும் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவதார் குழுமம் என்ற ஆலோசனை நிறுவனம், பெண்கள் பணியாற்றும் வகையில், பாதுகாப்பு, சிறந்த கட்டமைப்பு, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சிறந்த சூழல் என பல அம்சங்களை ஆராய்ந்து, நாட்டில் உள்ள 125 நகரங்களை ஆய்வு செய்து தரவரிசைப் படுத்தி உள்ளது.*

*அதன்படி தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறந்த சூழல் போன்ற அம்சங்களில் 53 புள்ளிகள் பெற்று பெங்களூரு முதலிடத்திலும், 50 புள்ளிகள் பெற்று சென்னை 2ம் இடத்திலும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் புனே, ஹைதராபாத் மற்றும் மும்பை நகரங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன. முதல்முறையாக, டெல்லி முதல் 10 இடங்களின் பட்டியலில் இருந்து வெளியேறி 11வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.*

*இந்த ஆய்வில் முதல் 25 நகரங்களின் பட்டியலில், சென்னை, கோவை, திருச்சி மதுரை, சேலம், வேலூர் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளதால் மிகச்சிறந்த சூழல் உள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---

### சி.பி.ஐ. — ஈ.டி. — ஐ.டி. — வரிசையில்

# பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதம் சென்சார் போர்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை,ஜன.10–**

மத்திய புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை மற்றும் வருமான வரித்துறை வரிசையில் சென்சார் போர்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதமாக மாறியுள்ளதாக குறிப்பிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதுதொடர்பாக சமூக வலைதளப் பக்கத்தில் தமது கடுமையான கண்டனத்தை பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:

#CBI, #ED, #IT வரிசையில் சென்சார் போர்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் புதிய ஆயுதமாக மாறியுள்ளது. கடுமையான கண்டனங்கள்! #CBFC

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.